JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.219/2020
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வைரவச்செல்வன் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | சாமிநாதன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கீழப்பாவூர் | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(1ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி ராஜ் குமாரை எனக்கு தெரியும். என் ஊர்க்காரரர். இரண்டாவது எதிரி வினோத்குமார் என்பவரை எனக்கு தெரியாது. அசா.1 முருகன் என்ற பெரியசாமி என் அண்ணன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2020ம் வருடம் 10சக்கர லாரியை ஏஎஸ்பிஎன் எடை மேடை அருகே நிறுத்தி வைத்திருந்த லாரியை என் அண்ணன் முருகன் ஓட்டி வந்தார். ஊரடங்கு காலம் என்பதால் லாரி ஓடவில்லை. இரண்டு நாட்கள் கழித்து லாரியை என் அண்ணன் பார்த்த போது லாரியை காணவில்லை. லாரியின் மதிப்பு ரூ.5 லட்சம் ஆகும். லாரியை காணவில்லை என்றதும் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். காவல்நிலையத்தில் இருந்து லாரி கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். லாரியை ராஜ்குமார் திருடியதாக போலிசார் சொன்னார்கள். திருடு போன லாரியை நீதிமன்றத்திலிருந்து இடைக்காலமாக அசா.1 பெற்றுக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.219/2020
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் என்ற பெரியசாமி | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | சாமிநாதன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கீழப்பாவூர் | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(1ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி ராஜ்குமாரை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர். இரண்டாவது எதிரி வினோத்குமார் என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 24.07.2020ம் தேதி கொரோனா காலகட்டத்தில் அசோக் லைலாண்ட் பத்து சக்கர லாரியை ஏஎஸ்பிஎன் எடை மேடை அருகே நிறுத்தி வைத்திருந்தேன். என்னுடைய லாரியின் பதிவு எண் TN 28 AD1417 ஆகும். சனிக்கிழமை அன்று லாரியை நிறுத்தி விட்டு சென்று விட்டேன். ஊரடங்கு காலம் என்பதால் லாரியை சுத்தம் செய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை அன்று வந்து பார்த்த போது லாரியை காணவில்லை. லாரியின் மதிப்பு ரூ.5லட்சம் ஆகும். நான் தேடி பார்த்தேன் லாரி கிடைக்கவில்லை. நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் மாலை காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள்.

நான் காவல்நிலையம் சென்றேன். லாரி கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் திருடு போன லாரிக்கான ஆவணங்களை போலிசாரிடம் காண்பித்தேன். லாரியை திருடிய நபர்கள் ராஜ்குமார் மற்றும் வினோத்குமார் என போலிசார் தகவல் சொன்னார்கள்.

காவல் நிலையத்தில் வைத்து நான் அவர்களை பார்த்தேன். நான் நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து லாரியை திரும்ப பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள லாரியை தான் நான் நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற்றுக்கொண்டது. மேற்படி புகைப்படம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. லாரியை சவாரிக்காக அனுப்பி வைத்துள்ளேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi